# ஆண்டாள் அருளிச் செய்த
# நாச்சியார் திருமொழி

## பதின்மூன்றாம் திருமொழி - கண்ணன் என்னும் தலைவி கண்ணன் அணிந்த ஆடை முதலியவற்றால் தன் வாட்டத்தைத் தணிக்க வேண்டுதல்

** கண்ணன் என்னும் கருந்தெய்வம் * காட்சி பழகிக் கிடப்பேனை *
புண்ணில் புளிப் பெய்தாற் போலப் * புற நின்று அழகு பேசாதே **
பெண்ணின் வருத்தம் அறியாத * பெருமான் அரையில் பீதக
வண்ண ஆடை கொண்டு * என்னை வாட்டம் தணிய வீசீரே 1

பால் ஆலிலையில் துயில் கொண்ட * பரமன் வலைப்பட்டிருந்தேனை *
வேலால் துன்னம் பெய்தாற் போல் * வேண்டிற்றெல்லாம் பேசாதே **
கோலால் நிரை மேய்த்து ஆயனாய்க் * குடந்தைக் கிடந்த குடமாடி *
நீலார் தண்ணந்துழாய் கொண்டு * என் நெறிமென் குழல் மேல் சூட்டீரே 2

கஞ்சைக் காய்ந்த கருவில்லி * கடைக்கண் என்னும் சிறைக் கோலால் *
நெஞ்சூடுருவ வேவுண்டு * நிலையும் தளர்ந்து நைவேனை **
அஞ்சேல் என்னான் அவன் ஒருவன் * அவன் மார்வணிந்த வனமாலை *
வஞ்சியாதே தருமாகில் * மார்வில் கொணர்ந்து புரட்டீரே 3

ஆரே உலகத்து ஆற்றுவார்? * ஆயர்பாடி கவர்ந்து உண்ணும் *
கார் ஏறுழக்க உழக்குண்டு * தளர்ந்தும் முறிந்தும் கிடப்பேனை **
ஆராவமுதம் அனையான் தன் * அமுத வாயில் ஊறிய *
நீர் தான் கொணர்ந்து புலராமே * பருக்கி இளைப்பை நீக்கீரே 4

அழிலும் தொழிலும் உருக் காட்டான் * அஞ்சேல் என்னான் அவன் ஒருவன் *
தழுவி முழுசிப் புகுந்தென்னைச் * சுற்றிச் சுழன்று போகானால் **
தழையின் பொழில் வாய் நிரைப் பின்னே * நெடுமால் ஊதி வருகின்ற *
குழலின் தொளை வாய் நீர் கொண்டு * குளிர முகத்துத் தடவீரே 5

நடை ஒன்றில்லா உலகத்து * நந்தகோபன் மகன் என்னும் *
கொடிய கடிய திருமாலால் * குளப்புக்கூறு கொளப்பட்டு **
புடையும் பெயரகில்லேன் நான் * போட்கன் மிதித்த அடிப்பாட்டில் *
பொடித் தான் கொணர்ந்து பூசீர்கள் * போகா உயிர் என் உடம்பையே 6

வெற்றிக் கருளக் கொடியான் தன் * மீமீதாடா உலகத்து *
வெற்ற வெறிதே பெற்ற தாய் * வேம்பேயாக வளர்த்தாளே **
குற்றம் அற்ற முலை தன்னைக் * குமரன் கோலப் பணைத் தோளோடு *
அற்ற குற்றம் அவை தீர * அணைய அமுக்கிக் கட்டீரே 7

உள்ளே உருகி நைவேனை * உளளோ இலளோ என்னாத *
கொள்ளை கொள்ளிக் குறும்பனைக் * கோவர்த்தனனைக் கண்டக்கால் **
கொள்ளும் பயன் ஒன்றில்லாத * கொங்கை தன்னைக் கிழங்கோடும் *
அள்ளிப் பறித்திட்டவன் மார்வில் எறிந்து * என் அழலை தீர்வேனே 8

கொம்மை முலைகள் இடர் தீரக் * கோவிந்தற்கோர் குற்றேவல் *
இம்மைப் பிறவி செய்யாதே * இனிப் போய்ச் செய்யும் தவம் தான் என்? **
செம்மை உடைய திருமார்வில் * சேர்த்தானேலும் ஒரு நான்று *
மெய்ம்மை சொல்லி முகம் நோக்கி * விடை தான் தருமேல் மிக நன்றே 9

** அல்லல் விளைத்த பெருமானை * ஆயர்பாடிக்கு அணிவிளக்கை *
வில்லி புதுவை நகர் நம்பி * விட்டுசித்தன் வியன் கோதை **
வில்லைத் தொலைத்த புருவத்தாள் * வேட்கை உற்று மிக விரும்பும் *
சொல்லைத் துதிக்க வல்லார்கள் * துன்பக் கடலுள் துவளாரே 10

**ஆண்டாள் திருவடிகளே சரணம்**

---